**ஒதுக்கீட்டுத் தலைப்பு 269 - மாவட்ட செயலகம், மட்டக்களப்பு**

**கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை - 2012 ஆம் ஆண்டு**

## 1.1 மாவட்ட செயலகத்தின் பிரதான பணிகள்

(i) வறுமைக் குறைப்பு நடவடிக்கைகளின் பங்கீடும் முகாமைத்துவமும்.

(ii) அனர்த்த நிவாரண மற்றும் புனரமைத்தல் செயற்திட்டங்களை நிர்வகித்தல்.

(iii) அபிவிருத்திச் செயற்திட்டங்களை திட்டமிடல் மற்றும் மேற்பார்வை செய்தல்.

(iv) தேர்தல்களை ஒருங்கிணைத்தல்

(v) மாவட்ட செயற்திட்ட நிர்வாகம் மற்றும் நெறிப்படுத்தல்.

(vi) ஓய்வூதியக் கொடுப்பனவுகளை மேற்கொள்ளல்.

(vii) பிறப்பு, விவாகம் மற்றும் இறப்புக்களை பதிவுசெய்தல்.

(viii) தேசிய அடையாள அட்டை மற்றும் கடவுச் சீட்டு விண்ணப்பங்களை கையேற்றல்

(ix) காணிகளுடன் தொடர்புடைய வேலைகள்

(x) வருமானச் சேகரித்தல்

(xi) வெள்ள நிவாரண நடவடிக்கைகள்

(xii) மனித வள அபிவிருத்தி

## 2. மாவட்ட செயலகத்தின் கீழ் உள்ள பிரதேச செயலகங்கள்

(அ) கோரளை பற்று வடக்கு
(ஆ) கோரளை பற்று மேற்கு
(இ) கோரளை பற்று மத்திய
(ஈ) கோரளை பற்று
(உ) கோரளை பற்று தெற்கு
(ஊ) ஏராவூர் பற்று
(எ) ஏறாவூர் பட்டிணம்
(ஏ) மன்முனை வடக்கு
(ஐ) காத்தான்குடி
(ஒ) மன்முனைப்பற்று

(ஓ) மன்முனை வடக்கு மற்றும் ஏறாவூர் பற்று
(ஔ) போரைதீவுப் பற்று
(ஃ) மன்முனை தென் மேற்கு
(க) மன்முனை மேற்கு

## 1.3 கணக்காய்வின் நோக்கெல்லை

மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிப் பதிவேடுகள், இணக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள், ஏனைய அறிக்கைகள் என்பவற்றினை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2013 யூலை 03 ஆந் திகதி மாவட்ட செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மீதான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மீதான மீளாய்வினதும் கொடுக்கல் வாங்கல் மாதிரிகளின் செவ்வை பார்த்தலினதும் அடிப்படையில் எழுந்தனவாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் அளவும் எனக்கு கிடைக்கப்பெற்ற பதவியணியினர், ஏனைய வளங்கள், நேரம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவு விரிவானதொரு கணக்காய்வினை மேற்கொள்ளக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டிருந்தன.

## 1.4 கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தர்களினதும் கணக்கீட்டு உத்தியோகத்தர்களினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தல் தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டினைத் திட்டமிடல், அமுல்படுத்தல், பேணுதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.5 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இங்கே (அ) இலிருந்து (ஈ) வரையான பொது அவதானிப்புக்கள் மற்றும் கீழே 1.6 இலிருந்து 1.11 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு காண்புகளைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்படுகின்றது.

### (அ) ஒதுக்கீட்டுக் கணக்குகள்

#### (i) மொத்த நிதி ஏற்பாடும் செலவும்

மீளாய்வாண்டில் மட்டக்களப்பு மாவட்ட செயலகம் மற்றும் அதன் கீழுள்ள பிரதேச செயலகங்களிற்காக மேற்கொள்ளப்பட்ட மொத்த தேறிய நிதிஏற்பாடு ரூபா 462,255,066 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியளவில் இதில் ரூபா 432,947,429 பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க தேறிய சேமிப்பு ரூபா 29,307,637 ஆக இருந்ததுடன் அது மொத்த தேறிய நிதி ஏற்பாட்டில் 6.3 சதவீதத்தினைக் கொண்டிருந்தது. விபரம் கீழே தரப்படுகின்றது.

| செலவு | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மதிப்பிடப்பட்ட நிதி ஏற்பாடு | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான தேறிய நிதி ஏற்பாடு | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பயன்பாடு | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சேமிப்பு | மொத்தத் தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | % |
| மீண்டுவருபவை | 290,450,000 | 404,805,066 | 398,477,963 | 6,327,103 | 1.6 |
| மூலதனம் | 32,450,000 | 57,450,000 | 34,469,466 | 22,980,534 | 40 |
| மொத்தம் | 322,900,000 | 462,255,066 | 432,947,429 | 29,307,637 | 6.3 |

**(ii) விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்**

ஒதுக்கீட்டுக் கணக்கில் காட்டப்பட்டிருந்த நட்டத்திற்கும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட நட்டங்கள் கூற்றிற்குமிடையே ரூபா 1,105,352 வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

**(iii) ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களினால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டினைப் பயன்படுத்தல்**

பல்வேறு கருமங்களுக்காக 21 அமைச்சுக்கள் மற்றும் 17 திணைக்களங்களிடமிருந்து முறையே ரூபா 1,021,038,129 மற்றும் ரூபா 1,742,681,949 அடங்கலாக ரூபா ரூபா 2,763,720,078 கூட்டுமொத்தமான நிதி ஏற்பாடு கிடைத்திருந்தது. அதில் முறையே ரூபா 951,925,349 மற்றும் ரூபா 1,730,783,674 அடங்கலாக ரூபா 2,682,709,023 பயன்படுத்தப்பட்டது. அதன்படி, ரூபா 81,011,055 நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டது.

**(ஆ) வருமானக் கணக்குகள்**

**மதிப்பிடப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானம்**

மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களால் 2012 ஆம் ஆண்டின் போது 16 வருமானக் குறியீடுகளுக்காக ரூபா 65.92 மில்லியன் தொகையான வருமானம் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. அதேநேரம் மீளாய்வாண்டில் ரூபா 68.68 மில்லியன் தொகையான வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. மதிப்பிடப்பட்ட வருமானத்தில் 0.56 சதவீதத்திற்கும் 3139 சதவீதத்திற்கும் இடைப்பட்ட வீச்சில் வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| வருமானக் குறியீடு | மதிப்பிடப்பட்ட வருமானம் | உள்ளபடியான வருமானச் சேகரிப்பு | (குறைத்து சேகரித்தல்)/ அதிகரித்துச் சேகரித்தல் | சதவீதம் |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | % |
| 10-03-07-02 | 5,490 | 5,490 | 0 | 100 |
| 10-03-07-03 | 9,549 | 9,550 | 0 | 100 |
| 10-03-07-05 | 11,500 | 10,250 | (1,250) | 89 |
| 10-03-07-99 | 860,000 | 1,037,486 | 177,485 | 121 |

| | | | | |
|---|---|---|---|---|
| 20-02-01-01 | 1,750,000 | 1,550,685 | (199,315) | 89 |
| 20-02-02-99 | 3,720,000 | 3,158,060 | (561,940) | 85 |
| 20-03-01-00 | 65,000 | 137,855 | 72,855 | 212 |
| 20-02-01-03 | 32,000 | 32,000 | 0 | 100 |
| 20-02-01-03 | 6,965,900 | 6,965,900 | 0 | 100 |
| 20-03-02-07 | 400 | 400 | 0 | 100 |
| 20-03-02-13 | 3,388,475 | 3,388,475 | 0 | 100 |
| 20-03-02-14 | 35,274,830 | 35,274,830 | 0 | 100 |
| 20-03-02-99 | 93,730 | 93,730 | 0 | 100 |
| 20-03-99-00 | 165,000 | 5,180,364 | 5,015,364 | 3139 |
| 20-04-01-00 | 11,830,002 | 11,830,003 | 0 | 100 |
| 20-06-02-00 | 1,750,000 | 9,725 | (1,740,275) | 0.56 |
| **மொத்தம்** | **65,921,876** | **68,684,803** | | |

**(இ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்**

**பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட எல்லைகள்**

269011 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட எல்லைகளும் உள்ளபடியான பெறுமதிகளும் கீழே தரப்படுகின்றன.

| செலவு | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| உச்ச எல்லை | உள்ளபடி யானவை | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடி யானவை | உச்ச எல்லை | உள்ளபடி யானவை |
| ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 36,500,000 | 28,101,337 | 20,000,000 | 33,782,187 | 87,000,000 | 78,967,907 |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(i) 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அரசாங்க உத்தியோகத்தர்களிற்கான முற்பணக் கணக்கிணக்கக் கூற்றின் பிரகாரம், 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவீடு நிலுவையாகக் காணப்பட்ட

மீதிகளின் மொத்தம் ரூபா 3,729,627 ஆகக் காணப்பட்டதுடன் அம்மீதிகளை அறவிடுதல் தொடர்பான பின்தொடர் நடவடிக்கைகள் மிகவும் பலவீனமான நிலையில் காணப்பட்டன.

(ii) மட்டக்களப்பு மாவட்டச் செயலகத்திலிருந்து மாகாண சபைக்கு இடமாற்றம் பெற்றுச்சென்ற 26 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 2,253,676 தொகை 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 01 முதல் 07 ஆண்டுகளாக தீர்க்கப்படாது காணப்பட்டது.

**(ஈ) பொதுவைப்புக் கணக்கு**

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பொது வைப்புக் கணக்கு மீதியின் மொத்தம் ரூபா 106,351,526 ஆகக் காணப்பட்டதுடன் விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| கணக்கு இலக்கம் | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|
| 6003/0/045/0 | 105,787,688 |
| 6003/0/015/0 | 563,838 |
| மொத்தம் | 106,351,526 |

(i) திறைசேரிப் புத்தகத்தின் படி 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பொது வைப்புக் கணக்கின் மீதி ரூபா 563,838 ஆகக் காட்டப்பட்ட அதேநேரம் மாவட்டச் செயலகத்தின் படி கணக்கில் காட்டப்பட்ட பொது வைப்புக் கணக்கின் மீதி பூச்சியமாகும். இவ்வேறுபாட்டிற்கான காரணம் 1983 இற்கு முன்னர் இடம்பெற்ற சில மோசடிகள் காரணமாக ஏற்பட்ட நட்டமென குறிப்பிடப்பட்டிருப்பினும் 28 ஆண்டுகளிற்கும் மேலாக இந்த வேறுபாட்டை தெளிவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) சுய வேலைவாய்ப்பு நிவாரண கொடுப்பனவிற்காக 2011 மார்ச் 16 ஆந் திகதி கிழக்கு மாகாண, சமூக சேவைகள் திணைக்களத்திடமிருந்து ரூபா 40,000 பெறப்பட்டிருந்தது. இருப்பினும், குறித்த நலனாளிகளிக்கு இத்தொகை செலுத்தப்படாது காத்தான்குடி பிரதேச செயலகத்தினால் ஏறத்தாழ இரண்டு ஆண்டுகளாக வைப்புக் கணக்கில் வைக்கப்பட்டிருந்தது.

## 1.6 நல்லாளுகை மற்றும் கணக்களிப்பொறுப்பு

### கூட்டிணைந்த திட்டம்

சகல அமைச்சுக்களின் செயலாளர்கள், மாகாண சபைகளின் பிரதம செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், மாவட்டச் செயலாளர்கள் மற்றும் உள்ளூராட்சி நிறுவன தலைவர்களிற்கு முகவரியிடப்பட்ட 2010 மார்ச் 10 ஆந் திகதிய பீஎப்/ஆர்/2/2/3/5(4) ஆம் இலக்க அரசாங்க நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் 2010 ஆம் ஆண்டிலிருந்து குறைந்தது தொடர்ந்துவரும் 03 ஆண்டுகளிற்காக கூட்டிணைந்த திட்டமொன்று மாவட்டச் செயலகத்தினால் வருடத்தின் ஆரம்பத்தில் தயாரிக்கப்பட வேண்டும். எனினும், 2012 திசெம்பர் 31 வரை அத்தகைய திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.7 சொத்துக்கள் முகாமைத்துவம்

### (அ) பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

கீழே பகுப்பாய்வு செய்யப்பட்டவாறு சில சொத்துக்கள் பயன்படுத்தப்படாது அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்டுக் காணப்பட்டமை கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

| சொத்து வகை | அலகுகளின் எண்ணிக்கை | பயன்படுத்தப்படாத அல்லது குறைவாகப் பயன்படுத்திய காலம் |
|---|---|---|
| (i) கட்டிடங்கள் | 06 | 09 மாதங்கள் |
| (ii) மோட்டார் வாகனங்கள் | 04 | 03 ஆண்டுகளிற்கு மேல் |
| (iii) நிழற்படப் பிரதி இயந்திரம் | 04 | 01 ஆண்டிற்கு மேல் |
| (iv) ஏனைய சொத்துக்கள் | 32 | 03 ஆண்டுகளிற்கு மேல் |

### (ஆ) வருடாந்த பொருள் மெய்மையாய்வை நடாத்தல்

பொது நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் 2010 திசெம்பர் 17 ஆந் திகதிய பீஎப்/பொருள் மெய்மையாய்வு/01 ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம், 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளிற்காக பொருள் மெய்மையாய்வை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.8 இணக்கமின்மைகள்

### சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மை

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றிலுள்ள ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டு கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மை |
|---|---|---|
| | ரூபா | |
| (i) நிதிப்பிரமாணங்கள் | | |
| நி.பி 109 | 10,556,370 | ரூபா 9,033,110 மற்றும் ரூபா 1,523,260 கூட்டுத்தொகையான நட்டங்கள் முறையே 05 ஆண்டுகள் மற்றும் 10 ஆண்டுகளிற்கு மேலாக நிலுவையாகக் காணப்பட்டது. அதேநேரம் இந் நட்டங்களை அறவிடுவதற்கு அல்லது பதிவழிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| நி.பி. 138 | 217,550 | காத்தான்குடி பிரதேச செயலகத்தின் உறுதிப்படுத்தும் உத்தியோகத்தரால் ரூபா 217,550 மொத்தமான நான்கு கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. |
| நி.பி. 571 | 973,364 | இரண்டு ஆண்டுகளிற்கும் மேல் நிலுவையாகவுள்ள ரூபா 973,364 தொகையான இரண்டு பிடிகாசு மீதி தொடர்பில் தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ii) அரசாங்க நிருவாக சுற்றுநிருபம் | | |
| 2006 மார்ச் 21 மற்றும் 2009 யூன் 12 ஆந் திகதிய எச்ஏ/டீஏ/12/27 ஆம் இலக்க சுற்றுநிருபம் | 104,357,414 | 2007 முதல் 2011 வரையான ஆண்டுகளில் 14 அரசாங்க விடுதிகள் நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும், உரிய பிரதேச செயலாளர்களால் 11 விடுதிகளில் குடியமர்ந்திருக்கவில்லை. |

## 1.9 செயற்திட்டங்களை அமுல்படுத்துவதில் பலவீனங்கள்

பிரதேச செயலகங்களால் அமுல்படுத்தப்பட்ட செயற்திட்டங்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனையில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) தேனீ வளர்ப்புச் செயற்திட்டம்

''திவிநெகும'' செயற்திட்டத்தின் கீழ் மீளாய்வாண்டில் 11 பிரதேச செயலகங்களில் அமுல்படுத்தப்பட்ட தேனீ வளர்ப்புச் செயற்திட்டத்திற்காக ரூபா 511,560 தொகை செலவிடப்பட்டிருந்தது. இச்செயற்திட்டத்தின் கீழ் 261 நலனாளிகளுக்கு உபகரணங்கள் வழங்கப்பட்டிருந்த போதிலும், 11 நலனாளிகள் மாத்திரம் செயற்திட்ட வேலைகளை தொடங்கியிருந்தனர்.

(ஆ) காலான் பயிர்ச்செய்கைச் செயற்திட்டம்

''திவிநெகும'' செயற்திட்டத்தின் கீழ் மீளாய்வாண்டில் 7 பிரதேச செயலகங்களில் காலான் பயிர்ச்செய்கைச் செயற்திட்டத்தினை அமுல்படுத்துவதற்காக ரூபா 921,200 தொகை செலவிடப்பட்டிருந்தது. இருப்பினும், 94 நலனாளிகளில், 88 நலனாளிகள் சந்தைப்படுத்தல் வாய்ப்புக்கள் கிடைக்காமையால் தமது நடவடிக்கைகளை இடைநிறுத்தியிருந்தனர்.

## 1.10 உள்ளகக் கட்டுப்பாடு

### நிதிக் கட்டுப்பாட்டுப் பலவீனங்கள்

ரூபா 294,605 தொகைக்கான இரண்டு கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் 2012 திசெம்பர் 31 ஆந் திகதியன்று அங்கீகரிக்கப்பட்டு, உறுதிப்படுத்தி காசேட்டிலும் வாக்குப்பணப் பேரேட்டிலும் பதியப்பட்டிருந்தன. தொடர்புடைய உறுதிச்சீட்டுக்களின் காசோலை இலக்கங்களும் காசேட்டில் பதியப்பட்டிருந்தன. இருப்பினும், 2013 மார்ச் 04 ஆந் திகதி வரை காத்தான்குடி பிரதேச செயலகத்தில் கொடுப்பனவிற்காக காசோலைகள் வரையப்பட்டிருக்காமை அவதானிக்கப்பட்டது.

## 1.11 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் மற்றும் உள்ளபடியான பதவியணியினர்**

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட மட்டம் | 1 | 1 | - |
| (ii) | மூன்றாம் மட்டம் | 62 | 52 | 10 |
| (iii) | இரண்டாம் மட்டம் | 718 | 588 | 130 |
| (iv) | ஆரம்ப மட்டம் | 146 | 123 | 23 |
| (v) | அமைய / தற்காலிகம் | 18 | 16 | 2 |
| | மொத்தம் | 945 | 780 | 165 |